1974 ஏப்ரல் 15]

ஆணையிட்டிருக்கிறது. அந்த அளவிற்கு ஓரளவிற்கு அதிக அளவிற்கு செவிலியர்கள் இந்த ஆண்டு நியமிக்கப்படுவதற்கு ஒப்புதல் கொடுத்திருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி: திரு. செழியன் அவர்கள் கேட்ட கேள்வியை எக்ஸ்பஞ்ச் செய்யவில்லையென்றால் தவறான செய்திகள் பத்திரிகைகளில் வரும். நீங்கள் ஒரு ரூலிங் கொடுக்காவிட்டால் பத்திரிகைகளில் போட்டு விடுவார்கள். அதைப் படிக்கும்போது நமக்குக் கஷ்டமாக இருக்கும்.

திரு. கோவை செழியன்: நான் ப்ரூவ் பண்ணுகிறேன்.

திரு. நா. வீராசாமி: ப்ரூவ் செய்வது வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதிக்காத கேள்விகள் நிகழ்ச்சிக் குறிப்பில் ஏறாது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இறந்து போனவரின் வாயில் மருந்தை விட்டார்கள் என்று சொன்னார்கள். இறந்து போய்விட்டார் என்று டாக்டர் டிக்ளேர் செய்வது வரையில் நர்ஸஸ் தங்கள் கடமையைச் செய்தாக வேண்டும். இறந்து போய்விட்டாரா இல்லையா என்பது ஐந்து நிமிட நேரம் பரிசோதனை செய்துதான் டாக்டர்கள் சொல்கிறார்கள். அந்த நேரத்தில் ஒரு மருந்து போட்டால் அந்த மருந்துக்காகும் செலவு நஷ்டம் அல்ல. அவர்கள் கடமையைச் செய்கிறார்கள் என்பதுதான் பொருள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இறும் உயிருக்கும் ஆயுள் மருந்து ஒழுக்குதல், தீது அன்றால், அல்லனபோல் ஆவனவும் உண்டு சில. ஆகவே, சாகிற உயிருக்கும் மருந்து ஊற்றுவது தீது அல்ல.

Distribution of yarn in Chinnalapatti

* 810 *Q.* —THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total number of cards for the purchase of yarn issued in Chinnalapatti in 1973 (till the end of May);

(*b*) the population of this place; and

(*c*) the total number of weavers in this area?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) 7,090 கார்டுகள்.

(இ) 24,417.

(உ) சார்ந்திருப்பவர்கள் உட்பட 16,566 பேர்கள்.

THIRU N. DENNIS : Sir, may I know from the Hon. Minister the method adopted to issue such cards, how the quantum of yarn is determined and whether any verification is made to detect bogus cards and if bogus cards are detected, may I know the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, நெசவாளர்கள் இருக்கின்ற ஒவ்வொரு ஊர்களிலும் அனைத்துக் கட்சி குழு போடப்பட்டு, கார்டுகள் இருக்கின்றனவா, அவைகள் யார் பேரில் இருக்கின்றன என்று அவர்களுடைய கருத்துக்களைப் பெற்று, ஒப்புதல் பெற்று, அந்தக் கார்டுகள் வழங்கப்படுகின்றன. அந்தக் கார்டுகளின் அடிப்படையில் இருக்கின்ற நூலைப் பகிர்ந்து கொடுக்கிறோம். அதிலே ஆங்காங்கு தவறு ஏற்பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டதற்குப் பின்னாலே, அந்த நான்-கோவாபரேடிவ் சென்டரிலே உள்ள தறிகள் அனைத்தையும் ஒன்றாக இணைத்து சர்வீஸ் கோவாபரேடிவ்ஸ் என்ற முறையில் சட்ட ரீதியில் கொண்டு வந்து விடலாம் என்று முடிவு எடுத்து இருக்கிறோம்.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : தலைவரவர்களே, சின்னாளப்பட்டியில் நெசவாளர்களுக்கு சர்வகட்சி சார்பில் கார்டு வழங்கப்பட்டது. அதை அறிந்த சில சுயநல மாஸ்டர் வீவர்கள் தவறான செய்திகளைப் பரப்புகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாஸ்டர் வீவர்கள் பரப்பினால் பரவாயில்லை, பொறுப்புள்ள அமைச்சர் பதவியில் உள்ளவர்களே டெல்லியில் இருந்து இங்கே வருகை தந்து, சின்னாளப்பட்டி ஜனத்தொகைக்கு அதிகமாகவே இது போன்ற கார்டுகள் கொடுக்கப்பட்டன என்று சொன்னதாகத் தகவல் தரப்பட்டது. உடனடியாக நானே அந்த அமைச்சரோடு தொடர்பு கொண்டேன். இதுவரையில் பதில் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, பொதுவாக தமிழ்நாட்டில் பல இடங்களில் இந்த கார்டு கொடுத்த விஷயத்தில் தவறு ஏற்பட்டது என்ற முறையில் இப்போது 'நியு எனுயுமரேஷன்' ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. அது முடிந்து விட்டதா? அப்படி முடிந்து விட்டது என்றால், இன்றைக்கு நாடு பூராவும் எத்தனை தறிகள் போட்டிருப்பதாக அரசுக்கு விவரங்கள் வந்து இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பல இடங்களில், சில இடங்களில் என்பதில் கருத்து வேறுபாடு இருக்கிறது. நானே ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் கடிதம் எழுதி, இப்படிப்பட்ட அனைத்துக்கட்சி குழு ஏற்படுத்தி இருக்கிறோம். அதிலே **நீங்கள்** தவறு இல்லாமல் இருக்க

1974 ஏப்ரல் 15]

நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசுக்கு ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டு இருக்கிறேன். ஆங்காங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் கருத்துகள் தெரிவித்தபடி, உடனடியாக விசாரணை செய்து, நடவடிக்கை எடுக்கச் செய்துள்ளோம். அதற்கு அடுத்து, சென்சஸ் விதிமுறைப்படி, மத்திய அரசாங்கத்தின் உதவியோடு, இப்படிப்பட்ட சென்சஸ் எனுயுமரேஷன், கே. டி. கே. தங்கமணி சொன்னது போல செய்தோம். அந்த சென்சஸிலும் தவறு இருப்பதாகத் தகவல் வந்து கொண்டிருக்கிறது. இறுதியான பரிகாரம், சர்விஸ் கோவாபரேடிவ் சொசைடீஸ் மூலம் நூல் வழங்குவதற்கு, சட்ட ரீதியாகப் பதிவு செய்திருக்கும் கோவாபரேடிவ்ஸ்க்குக் கொடுப்பது என்று முடிவு எடுத்து செயல்பட்டு வருகிறது.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, சின்னாளப்பட்டியில் அமுதா டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனத்திற்குக் கார்டு வழங்கப்பட்டது உண்மையா? அப்படி ஒரு நிறுவனம் இல்லை என்று புகார் வந்திருப்பது உண்மையா? அது குறித்து விசாரணை செய்ய அரசு முயற்சி எடுத்து இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது வந்த இந்தத் தகவல் இயக்குனருக்கு அனுப்பப்பட்டு விசாரிக்கப்படும்.

கொடுமுடியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை

***811 வினா—திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு வட்டத்திலுள்ள கொடுமுடி அருகில் கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலை ஒன்றை ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தின் எல்லைக்குள் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றை அமைக்குமாறு மேற்படி ஊராட்சி ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது. ஏனைய சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்கான இடங்களைத் தேர்ந்தெடுக்கும்போது இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, கொடுமுடி பகுதியில் ஓராண்டில் 11 மாதத்திற்குத் தண்ணீர் இருக்கிறது. நிறைய கரும்பு வளர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அமைக்க இருக்கும் சர்க்கரை ஆலையை அந்தப் பகுதியில் அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பரிசீலிக்கப்படும் என்று சொன்னேன்.